## வகுப்பு-7 - பருவம்: 1 - புவியியல் 2. நிலத்தோற்றங்கள்

71. கடல்அலைகள் மேற்கூரையை அரிப்பதால் எஞ்சி நிற்கும் சுவர் போன்ற தோற்றங்கள் ______.

1. கடல் வளைவுகள்   2. விரிசல்கள்   3. கடற்குகைகள்   4. கடல் தூண்கள்

72. கடல் அலைகளால் மணல் மற்றும் சரளைகள் படிந்துள்ள நீள்வட்ட வடிவ மணல் அல்லது சேறு ______.

1. மணல் திட்டுக்கள்   2. கடல் தூண்கள்

3. வண்டல் படிவுகள்   4. கடற்கரை

73. கடற்கரையிலிருந்து பகுதியாகவோ அல்லது முற்றிலுமாக பிரிக்கப்பட்ட ஆழம் குறைவான நீர்தேக்கம் ______.

1. காயல்கள்   2. உப்பங்கழிகள்   3. லகூன்   4. இவையனைத்தும்

74. உலகிலேயே மிக நீளமான கடற்கரை அமைந்துள்ள நாடு ______.

1. இந்தியா   2. ஜப்பான்   3. அமெரிக்கா   4. இங்கிலாந்து

75. உலகிலேயே மிக நீளமான கடற்கரை ______.

1. இந்தியா - சென்னை - மெரினா கடற்கரை

2. அமெரிக்கா - புளோரிடா - மியாமி கடற்கரை

3. இந்தியா - தமிழ்நாடு - மகாபலிபுரம் கடற்கரை

4. இந்தியா - கன்னியாகுமரி - கடற்கரை

76. உலகிலேயே இரண்டாவது நீண்ட கடற்கரை ______.

1. அமெரிக்கா - புளோரிடா   2. மகாபலிபுரம் கடற்கரை

3. சென்னை - மெரினா கடற்கரை   4. கோவளம் கடற்கரை

77. முதன்மை புறச் செயல்முறைகள் என்பது ______.

LIVEWORKSHEETS

1. ஆறு, பனியாறு 2. காற்று

3. கடல்அலைகள் 4. இவையனைத்தும்

78. வானிலைச்சிதைவு மற்றும் அரித்தல் செயல்கள் மூலம் தொடர்ந்து மறுவடிவமைப்பதால் தோன்றுபவை ______.

1. நிலத் தோற்றங்கள் 2. காலநிலை மாற்றங்கள்

3. வானிலை மாற்றங்கள் 4. பருவகால மாற்றங்கள்

79. ஆறு, பனியாறு, காற்று மற்றும் கடல் அலைகள் ஆகியன ______.

1. அகச் செயல்முறைகள் 2. முதன்மை புறச் செயல்முறைகள்

3. நிலத்தோற்றங்கள் 4. வானிலைச் சிதைவு

80. ஈர்ப்புவிசையின் காரணமாக மலைச்சரிவில் கீழ்நோக்கி மெல்ல நகரும் பெரும் பனிக் குவியல்கள் ______.

1. பனியாறுகள் 2. பனிக் குன்றுகள் 3. பனிச்சரிவு 4. பனிக்கட்டிகள்

81. மொரைன்கள் என்பவை ______.

1. வண்டல் படிவுகள் 2. வண்டல் விசிறிகள்

3. பனியாற்றுப் படிவுகள் 4. பனியாறுகள்

82. பாலைவனத்தில் அரித்தல் மற்றும் படிய வைத்தலை ஏற்படுத்தும் முதன்மைக் காரணி ______.

1. காற்று 2. வெப்பம் 3. அரித்தல் 4. மணல்

83. கடல் அலைகளால் மணல் மற்றும் சரளைகள் படிந்துள்ள கடலோரப் பகுதி ___

1. மணற்பரப்பு 2. கடற்கரை 3. நகரங்கள் 4. இவையனைத்தும்

84. உயர்நிலங்கள் அரிப்பு செயல்கள் மூலம் தாழ்நிலப்பகுதிகளாகவும், படியவைத்தல் செயல்கள் மூலம் உயர்நிலங்களாகவும் மாறுவது நிலமட்டம் ______.

LIVEWORKSHEETS

1. சமமாக்கல் 2. உயரமாக்கல் 3. சிதைவடைதல் 4. உருமாறுதல்

85. புவிமேற்பரப்பில் பாறைகள் உடைவதும் மற்றும் நொறுங்குவதும் ______.

1. பாறை உருமாறுதல்
2. மணல் உருவாக்கம்
3. பாறை சிதைவடைதல்
4. படிவுகள்

86. ஆற்றினால் தோற்றுவிக்கப்படும் பெரிய விசிறி வடிவ படிவுகள் ______.

1. டெல்டாக்கள்
2. மொரைன்கள்
3. முகத்துவாரம்
4. இவையனைத்தும்

87. பொருத்துக.

i. வட அமெரிக்கா - a) ஏஞ்சல்
ii. அமெரிக்க ஐக்கியநாடுகள் எல்லை - b) விக்டோரியா
iii. தென் அமெரிக்கா - c) கனடா
iv. ஜாம்பியா, ஜிம்பாப்வே - d) நயாகரா

1. i - c ii - d iii - a iv - b
2. i - a ii - b iii - d iv - c
3. i - c ii - d iii - b iv - a
4. i - d ii - c iii - a iv - b

88. பொருத்துக.

i. சேத்தியாத்தோப்பு - a) துருக்கி
ii. குதிரைக் குளம்பு ஏரி - b) உயர் அணை
iii. ஆசியா மைனர் - c) அரித்தல் மற்றும் படிதல்
iv. லெவீஸ் - d) ஆற்று வளைவுகள்

1. i - d ii - c iii - b iv - a
2. i - d ii - c iii - a iv - b
3. i - b ii - c iii - a iv - c
4. i - c ii - a iii - b iv - d

89. பொருத்துக.

i. பள்ளத்தாக்கு பனியாறுகள் - a) சர்க்குகள்

LIVEWORKSHEETS

ii. பனி அரிப்பு - b) கார்ரி சர்க்

iii. ஸ்காட்லாந்து - c) கார் சர்க்

iv. ஜெர்மனி - d) இமயமலை, ஆல்ப்ஸ் மலைப்பகுதி

1. i - c ii - b iii - d iv - a
2. i - b ii - d iii - a iv - c
3. i - a ii - c iii - b iv - d
4. i - d ii - a iii - b iv - c

90. பொருத்துக.

i. மொரைன்கள் - a) விரிசல்கள்

ii. பர்கான்கள் - b) உப்பங்கழிகள்

iii. கடல் குகைகள் - c) பனியாற்றுப் படிவுகள்

iv. காயல்கள் - d) மணல் குன்றுகள்

1. i- c ii - d iii - b iv - a
2. i - d ii - c iii - a iv - b
3. i - c ii - d iii - a iv - b
4. i - a ii - b iii - c iv - d

91. பொருத்துக.

i. ஒடிசா - a) வேம்பநாடு ஏரி

ii. கேரளா - b) மியாமி கடற்கரை

iii. அமெரிக்கா - c) மெரினா கடற்கரை

iv. சென்னை - d) சிலிகா ஏரி

1. i - d ii - a iii - b iv - c
2. i - d ii - a iii - c iv - b
3. i - c ii - b iii - d iv - a
4. i - b ii - d iii - a iv - c

92. கூற்று: கடற்கரை மாற்றத்திற்கு உட்பட்டது.

காரணம்: அலைகளின் அரிப்பும், படிதலும் கடலோர நிலப்பரப்புகளில் ஏற்படுகின்றன.

1. காரணம் கூற்றை விளக்கவில்லை.
2. காரணம் கூற்றை விளக்குகிறது.
3. கூற்று தவறு, காரணம் சரி.
4. கூற்றும், காரணமும் தவறு.

LIVEWORKSHEETS

93. கூற்று: காற்றினால் மணல் ஒரு பெரும்பரப்பில் படிவது காற்றடி வண்டல் படிவுகள் எனப்படும்.

காரணம்: காற்று மணலை நீண்ட தொலைவிற்கு கடத்திச் செல்கிறது.

1. காரணம் கூற்றை விளக்கவில்லை. 2. காரணம் கூற்றை விளக்குகிறது.

3. கூற்று மற்றும் காரணம் சரி. 4. கூற்றும், காரணமும் தவறு.

94. கூற்று: கிளையாற்றின் முகத்துவாரங்களில் தோற்றுவிக்கப்படும் படிவுகள் டெல்டாக்கள்.

காரணம்: ஆறு, கடலை அடையும் போது கிளை ஆறுகள் பிரிவதில்லை.

1. காரணம் கூற்றை விளக்குகிறது. 2. கூற்று சரி, காரணம் தவறு.

3. கூற்றும், காரணமும் சரி. 4. கூற்றும், காரணமும் தவறு.

95. பின்வருவனவற்றுள் கடல் அலை அரிப்புடன் தொடர்பற்றது ______.

1. கடல் ஓங்கல் 2. கடல் வளைவுகள் 3. கடல் தூண் 4. கடற்கரை

96. கூற்று: முகத் துவாரப் பகுதியில் ஆறுகளால் டெல்டாக்கள் உருவாகின்றன.

காரணம்: கடல் பகுதியை ஆறு அடையும்போது ஆற்றின் வேகம் குறையும்.

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. 2. கூற்று சரி, காரணம் தவறு.

3. கூற்று தவறு, காரணம் சரி. 4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

97. கூற்று: கடல் வளைவுகள் இறுதியில் கடல் தூண்களாகின்றன.

காரணம்: கடல் தூண்களின் அலைகளின் படிவுகளால் ஏற்படுகின்றன.

1. கூற்று மற்றும் காரணம் இரண்டும் சரி. 2. கூற்று சரி, காரணம் தவறு.

3. கூற்று தவறு, காரணம் சரி. 4. கூற்று மற்றும் காரணம் இரண்டும் தவறு.

98. பொருத்துக.

i. கைவிடப்பட்ட மியாண்டர் வளைவுகள் - a) பனியாறுகள்

ii. நகரும் ஒரு பெரும் பனிக்குவியல் - b) பிறை வடிவ மணற் குன்றுகள்

iii. பிறை வடிவ மணல் மேடுகள் - c) காயல்

LIVEWORKSHEETS

iv. வேம்பநாடு ஏரி - d) குதிரைக் குளம்பு ஏரி

1. i - d ii - a iii - b iv - c
2. i - d ii - a iii - c iv - b
3. i - c ii - b iii - d iv - a
4. i - b ii - d iii - a iv - c

99. கடல் அலைகளால் உருவாக்கப்பட்ட நிலத்தோற்றம் _______.(NMMS-2020-21)

(1) கடல் ஓங்கல்
(2) கடற் குகைகள்
(3) கடல் வளைவுகள்
(4) மேற்காண் அனைத்தும்

100. பொருத்துக (NMMS-2020-21)

a. சர்க்குகள் - i. கலஹாரி
b. காற்று அரிப்புத் தனிக் குன்றுகள் - ii. பழவேற்காடு
c. காற்றடி வண்டல் படிவுகள் - iii. ஜெர்மனி
d. உப்பங்கழிகள் - iv. சீனா

(1) a - ii b - iv c - i d - iii
(2) a - i b - iii c - ii d - iv
(3) a - iii b - i c - iv d - ii
(4) a - iv b - i c - iii d - ii

101. பீடப் பாறைகள் இப்படியும் அழைக்கப்படுகின்றன. (NMMS-2018)

(1) லோயஸ்
(2) பர்கான்கள்
(3) காளான் பாறைகள்
(4) இன்சல்பார்க்குகள்

102. பனியாறுகள் இல்லாத கண்டம் _______. (NMMS-2018)

(1) வட அமெரிக்கா
(2) தென் அமெரிக்கா
(3) ஆஸ்திரேலியா
(4) ஆப்பிரிக்கா

LIVEWORKSHEETS